தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

தொடக்கம் : 1946 (தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டது. அரசு அங்கீகார ஆணை எண் : 1998/81)

TAMILNADU ELEMENTARY SCHOOL TEACHERS' FEDERATION

(Attached with All India Primary Teachers' Federation & Education International)

கோயம்புத்தூர் மாவட்டம் (கிளை)

பதிவு எண். 118/61 அலுவலகம் : 51, ராஜவீதி, செளடம்மன் கோவில் அருகில், கோவை - 641001.

C. அரசு

மாவட்டச் செயலாளர்

Mobile : 9894390066

carasucbe@gmail.com

16.09.2021

பெறுதல்;-

மதிப்புமிகு பொதுச் செயலாளர் அவர்கள்,
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி,
சென்னை.

வணக்கம்..!

கீழ்க்கண்ட கோரிக்கைகள் எங்களது கோவை மாவட்டத்திலிருந்து தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1) புதிய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் பெற்றுத் தர வேண்டுகிறோம்

2) 1.9.2009 **க்குப்பின் புதிதாக பதவியேற்ற ஆசிரியர்களுக்கான ஊதிய விகிதம் மிகவும் குறைவாக இருப்பதால் அந்த ஊதியக் குறைபாடுகளை சரி செய்ய வேண்டுகிறோம்.**

3) கடந்த ஊதியக் குழு அமைக்கப்பட்ட புதிய ஊதிய குழுவின் அடிப்படையில் பெறப்பட்ட ஊதியங்கள் மூத்த ஆசிரியர்களுக்கும் இளைய ஆசிரியர்களுக்கும் இடையே ஊதிய வேறுபாடுகள் மிக அதிகமாக தலைமை ஆசிரியர்களைவிட உதவி ஆசிரியர்கள் அதிக ஊதியம் பெற்றுவருகின்றனர்) உள்ளதால் அதை சரி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுகிறோம். கடந்த 2 ஊதியக் குழுவில் ஏற்பட்டுள்ள ஊதிய முரண்பாடுகள் அனைத்தையும் ஆராய்ந்து களைந்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள கேட்டுக்கொள்கிறோம்

4) நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அகவிலைப்படியை உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்,

5) மேற்படிப்புக்கான ஊக்க ஊதிய உயர்வுகள் வழக்கம்போல விடுபட்டவர்கள் அனைவருக்கும் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

6) பள்ளிகளில் தொடர்ந்து கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி மாணவர் கல்வி நலன் காக்க வேண்டுகிறோம்.

7)) எங்கள் கோவை மாவட்டத்தில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரிய ஆசிரியைகள் உயர்கல்வி படித்து பின்னேற்பிற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் அதை பெற்றுத்தர ஆவன செய்ய வேண்டும்.

8) கடந்த காலங்களில் பணிநிரவலில் அடுத்த ஒன்றியத்திற்கு பணிமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மீளாும் அதே ஒன்றியத்தில் அதே பள்ளியில் வாய்ப்பிருந்தால். வரும் ஆசிரியர் கலந்தாய்வு நிகழ்வில் மீண்டும்அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

9) ஆசிரியர்களின் ஊதியத்தில் பிடித்தம்
செய்யப்படும் மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் ஆசிரியர்களின் மருத்துவ செலவிற்காக செலவிடப்படும் அனைத்து தொகையும் பெறும் வகையில் உரிய ஆணைகள் வெளியிட வேண்டுகிறோம்.

10)ஆசிரியர்களின் தேர்வு நிலை சிறப்பு நிலை குறித்த குறித்த கருத்துருக்களை விரைவில் ஆராய்ந்து உடனடியாக ஆணைகள் வழங்கி உதவ உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

11)உதவிபெறும் பள்ளிகளில் 15.11.2011-க்கு முன்னர் பணி நியமனம் பெற்று பணியாற்றி வரும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் சுமார் 1500 பேருக்கு ஆசிரியர் தகுதி தேர்வு(TET) கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் இந்த நிபந்தனையை தளர்த்திட ஆவண செய்ய வேண்டும்.

12) உதவி பெறும் பள்ளிகளுக்கு வழங்கப்படும் Maintenance Grands மீண்டும் 2% வழங்கப்பட வேண்டும். அதை உறுதி செய்ய வேண்டுகிறோம்.

13) அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் வரும் ஆண்டுகளில் ஆங்கில வழி கல்வி தொடர உரிய ஆணைகள் பெற்று தர வேண்டுகிறோம்.

14) தமிழாசிரியராய் இருந்து நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியராய் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பி.எட் முடித்தமைக்கான ஊக்க ஊதிய உயர்வு வழங்கிட வலியுறுத்தப்பட வேண்டும். [ஏனெனில் பணிக்காலத்தில் ஒரு ஊக்க உயர்வு மட்டும்தான் பெற்றுள்ளார்கள்.]

15)பள்ளிப்பணிகள்அனைத்தும் இணைய வழியில் மேற்கொள்ளவேண்டிய இன்றைய சூழ்நிலையில் பள்ளிகளுக்கு இணைய வசதி ஏற்படுத்தி தர வேண்டும். ஆசிரியர்களுக்கு இணையவழி கற்பித்தல் மேற்கொள்ளவும். அலுவல் சார்ந்த புள்ளி விவரங்களை உடனுக்குடன் அனுப்பவும் இணைய வசதியுடன் கூடிய (சிம் கார்டு) வழங்க ஆவண செய்ய வேண்டும்.

16) ஆசிரியர்களின் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை அரிய சென்னை தேர்வுகள் துறைக்கு விண்ணப்பிக்கும் பொழுது உரிய நடவடிக்கைகள் எடுத்து விரைவில் சான்றிதழ் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

17) நம் இடைநிலை ஆசிரியர்கள் BA எக்கனாமிக்ஸ் B.ed மற்றும் B,com. B.ed படித்த ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

18) கடந்த ஆண்டுகளில் நமது இடைநிலை ஆசிரியர்களை எல்கேஜி யுகேஜி வகுப்புகளுக்கு (பால்வாடி) பணி மாற்றம் செய்யப்பட்டவர்களை மீண்டும் பள்ளிகளில் காலியாக உள்ள பனியிடங்களில் இடைநிலை ஆசிரியர்களை நியமிக்க வேண்டுகிறோம். மேலும் (பால்வாடியில்) எல்கேஜி யுகேஜி குழந்தைகளுக்கு தனியாக அதற்காக மாண்டிசோரி படித்த ஆசிரியர்களை நியமனம் செய்திட வேண்டுகிறோம்.

19) நம் அரசு நடுநிலைப் பள்ளிகளில் சிறப்பாசிரியர்களை ஓவியம் தையல் கணினி பாட்டு மற்றும் விளையாட்டு ஆசிரியர்களை நியமித்து மாணவர்கள் அனைத்து துறைகளையும் வல்லவர்களாக உருவாக்க வேண்டி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

20) ஆசிரியர்களின் பதவி உயர்வு பெற்றாலும், அவர்களின் மொத்த பணி காலத்தை கணக்கில் கொண்டு தேர்வு நிலை சிறப்பு நிலை யும் வழங்கிட வேண்டுகிறோம்.

21) தொடக்க - நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பதவி உயர்வு வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

22) ஆசிரியர்களின் பதவி உயர்வின் போது அவர்களின் மொத்த பணத்தையும் கணக்கில்கொண்டு தனியாக பதிவு உயர்வு வழங்கிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

23)கடந்த 1999ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஆசிரியராக பணி நியமனம் செய்தவர்களுக்கு இதுவரை அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களாக பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை அவர்களுக்கும் வருகின்ற காலங்களில் பட்டதாரி ஆசிரியராக ஆக பதவி உயர்வு வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

24) ஏழாவது ஊதியக்குழுவுக்குப் பின்பு, இடைநிலை ஆசிரியர் பெற்று வரும் தனி ஊதியம் ரூ 2000 / பட்டதாரி ஆசிரியராகப் பணி உயர்வு பெறும்பொழுது தனி ஊதியம் ரத்து செய்யப்பட்டு ஊதிய நிர்ணயம் செய்யப்படுவதால், இடைநிலை ஆசிரியராகப் பெற்று வந்த ஊதியத்தை விடக் குறைவான ஊதியம் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. பதவி உயர்வுக்குப் பின்பு ஏற்படும் தனி ஊதிய இழப்பை ஈடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுகிறோம்.

25) மத்திய அரசுக்கு இணையான ஊதியம் பெறுவதே இலட்சியமாக இருந்தாலும் சம வேலைக்கு சம ஊதியம் நிச்சியம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர் ஊதிய முரண்பாட்டை முற்றிலுமாக களைவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுகிறோம்

26)கடந்த 2004, இல் தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் 2006 வரையிலான நாட்களை பணிக்காலமாக சேர்த்து வரன்முறைப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுகிறேன்.

27) தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசு ஊழியர்கள் போல சமமான ஊதியம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம்.

மேற்கண்ட எங்கள் மாவட்டத்தின் சார்பாக தெரிவிக்கப்படும் நியாயமான கோரிக்கைகளை வரும் 18.9.2021 அன்று நமது பள்ளி கல்வி அமைச்சர் அவர்களை தாங்கள் நம் இயக்கத்தின் சார்பாக சந்திக்கும் பொழுது இந்த கோரிக்கைகளையும் சேர்த்து வழங்கி உரிய நடவடிக்கை மேற்கொண்டு மாணவர் நலன் ஆசிரியர் நலன் காத்து உதவிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவண்,

16/9/21

(சி.அரசு)

மாவட்டச் செயலாளர்,

கோவை